**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 87/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 25.11.2025.**

| | |
|---|---|
| **Name : காசிலிங்கம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொம்மிடி பக்கத்தில் உள்ள சந்தனூர் மேட்டில் குடியிருந்து தற்போது வீட்டிலிருந்து வருகிறேன். விபத்தில் இறந்தது என் மாமனார் சின்னசாமி ஆவார். 11.02.2022 ம் தேதி போலீசார் எனக்கு போன் செய்து சொன்ன போது நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்தேன். என் மாமனாரின் மகன் மற்றும் மனைவி இறந்துவிட்டதால் மன உளைச்சலில் இருந்த போது காப்பகத்தில் சேர்ந்து இருந்தார். என் மனைவி சம்பவ சமயத்தில் கர்பமாக இருந்தார். அதனால் என் மாமனாரை காப்பகத்தில் விட்டிருந்தேன்.

2) என் மாமனார் கடந்த 10.02.2023 ம் தேதி இரவு 10.30 மணிக்கு பொட்டனேரி பக்கம் இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் அருகே சாலையின் ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்த போது பூங்குழலி என்ற தனியார் பேருந்து மேட்டூரிலிருந்து மேச்சேரி நோக்கி வந்து மோதியதால் விபத்து ஏற்பட்டது. என் மாமனாருக்கு உடம்பில் அனைத்து இடங்களிலும் காயம் ஏற்பட்டது.

3) இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) மனநலம் பாதிக்கப்பட்டதாக என் மாமனாரை விருதாச்சலம் பகுதியில் முதியோர் காப்பகத்தில் விடப்பட்டாரா என்றால் என் மாமனார் மனநலம் பாதிக்கப்படவில்லை. சம்பவம் குறித்து போலீசார் மற்றும் ஆம்புலன்ஸ் டிரைவர் சொன்னார் என்றால் ஆமாம். புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் கைப்பட எழுதி கொடுத்தேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம்.

5) புகார் தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் ஆமாம். அதிலுள்ள விவரம் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். அதில் என் மாமனார் மனநலம் பாதிப்பதாக கண்டுள்ளது என்றால் போலீசார் எழுதிக் கொண்டனர். நான் என் மாமனாரை கார் ஸ்டேன்டு, பெட்ரோல் பங்க் பகுதியில் கண்டால் என்னிடம் சொல்லுமாறு கூறியிருந்தேனா என்றால் ஆமாம். எதற்காக அவ்வாறு சொன்னேன் என்றால் அவர் சொல்லாமல் வீட்டை விட்டு வந்ததால் சொன்னேன்.

6) பேருந்து எங்கிருந்து எங்கு சென்றது என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம். விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது. நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். இழப்பீடு பெற்றுவிட்டேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.26 10:33:56 +0530

Judicial Magistrate No.II,
Mettur.